ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2120/27 - 2019 අප්‍රේල් මස 27 වැනි සෙනසුරාදා - 2019.04.27
*2120/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இல. - J/232 மாவிட்டபுரம் தெற்கு கிராம அறுவலர் பிரிவில், மாவிட்டபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகதினால் தயாரிக்கப்பட்ட 2018.05.16 ஆந் திகதிய Ya/TLL/2018/39 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 0.0180 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

**01. துண்டு 'ஏ' - புளியடி - விஸ்தீரணம் : 0.0180 ஹெக்டயார்**

வடக்கு: காணியின் பெயர் இனங்காணப்படவில்லை மற்றும் மாணிக்கம் இராசரத்தினத்தின் ஆதனம்; கிழக்கு: வீதி (பிரதேச சபை); தெற்கு: புளியடி, ரமேஷ் பாலசிங்கத்தின் ஆதனம்; மேற்கு : புளியடி, சின்னவன் நவரட்ணத்தின் ஆதனம்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இலக்கம். : 4-3/5/2018/HA/04.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 01.

05 - 200

1A - G 29940 - 16 (2019/04)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.